அரியலூர் மாவட்ட விளையாட்டு அரங்கில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் 'நடப்போம் நலம் பெறுவோம்' என்ற நடைபயிற்சியினை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்து பொதுமக்களுடன் நடைபயிற்சி மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் ஆகியோர் உள்ளனர்.

அரியலூர் மாவட்டத்தில்

"நடப்போம் நலம்பெறுவோம்" நடைபயிற்சி!

அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்!

அரியலூர், நவ. 7 - அரியலூர் மாவட்ட விளையாட்டு அரங்கில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் "நடப்போம் நலம் பெறுவோம்" என்ற நடை பயிற்சியினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவ சங்கர் துவக்கி வைத்து, பொதுமக்களுடன் நடைப யிற்சியினை மேற்கொண் டார்.

இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்ட மன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் ஆகியோர் முன் னிலையில் நடைபெற்றது.

தமிழ்நாடு முதல மைச் சர் மு.க.ஸ்டாலின் அவர் கள் உத்தரவிற்கிணங்க, பொதுமக்களிடையே நடை பழக்கத்தை ஊக்கு வித்து உடல் நலத்தை மேம் படுத்திட "நடப்போம் நலம் பெறுவோம்" என்ற நடை பயிற்சி திட்டத்தினை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென் னையில் இன்றையதினம் துவக்கி வைத்துள்ளார்கள். அதன் தொடர்ச்சியாக, தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களி லும் நடப்போம் நலம் பெறுவோம் நடை பயிற்சி திட்டம் செயல்படுத்தப் பட்டு வருகிறது. அந்தவ கையில் இன்றையதினம் அரியலூர் மாவட்டத்தில் "நடப்போம் நலம் பெறு வோம்" சுகாதார திட்டத்தின் படி 8 கிலோ மீட்டர் தூரம் உள்ள நடை பயிற்சி பாதை கண்டறியப் பட்டு, அதன்படி நடப்போம் நலம்பெறு வோம் நடை பயிற்சியா னது அரியலூர் மாவட்ட விளையாட்டு அரங்கிலி ருந்து தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கரால் துவக்கி வைக் கப்பட்டது.

உலக சுகாதார அமைப்பு ஆய்வுகளின் படி எட்டு கிலோமீட்டர் தூரம் நடப் பதால் நீரழிவு மற்றும் ரத்த அழுத்த நோய் 28 சதவீதம், இதய நோய் தாக்கம் 30 சத வீதம் குறைவாகிறது என்று தெரியவந்துள்ளது. ஆகவே, நடைபயிற்சி செய்து சுறுசுறுப்பாகவும், ஆரோக்கியமான உடல் நலம் காக்கும் வகையில், அரியலூர் நகரத்தில் மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் துவங்கி கல் லூரி சாலை வழியாக பல் லேரி, அரசு மருத்துவம னைச் சாலை வழியாக பென்னி ஹவுஸ் தெருவில் இருந்து பெரம்பலூர் சாலை, சத்திரம்; நகராட்சி நூலகம், தேரடி வழியாக அரசு மேல்நிலைப்பள்ளி செட்டி ஏரி வழியாக ஜெயங்கொண்டம் சாலை யில் அரசு பல்துறை அலுவ லக கட்டிடம் வரை நான்கு கிலோ மீட்டர் தூரமும் அங்கிருந்து திரும்பி மீண் டும் அதே வழியில் மாவட்ட விளையாட்டு அரங்கத்தை அடைந்து எட்டு கிலோமீட்டர் தூரம் நடை பயணத்தை நிறைவு செய்யும் வகையில் அமைக் கப்பட்டுள்ளது.

இதேபோன்று ஒவ் வொரு மாதமும் முதல் ஞாயிற்றுக்கிழமை அன்று மாவட்ட அரசு அலுவலர் கள் இதில் கலந்து கொள்ள உள்ளார்கள். மேலும், நடைப்பயிற்சி செல்பவர்க ளுக்கு துவக்க இடம் மற் றும் இடையிடையே மருத் துவக் குழுவினர் முகாம் அமைக்கப்பட்டு அவர்கள் உடல்நலம் பரிசோதனை மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. மேலும், இப்பயண வழி யில் ஒரு கிலோமீட்டருக்கு ஓரிடத்தில் இளைப்பாறும் இடமும், குடிதண்ணீர் வச தியும் ஏற்படுத்தப்பட்டுள் ளது. இதனை பொதுமக் கள் முறையாக பயன்படுத்தி உடல்நலம் காக்குமாறும், தினமும் நடைபயிற்சி மேற்கொள்ப வர்கள் இத்தடத்தினை பயன்படுத்திக்கொண்டு தங்களது உடல் நலத்தினை மேம்படுத்தி கொள்ள வேண்டும் என தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவ சங்கர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு.அஜித்தா, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் விஜயலட்சுமி, அரியலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு. முத்துக்கிருஷ்ணன், அரிய லூர் வட்டாட்சியர் ஆனந் தவேல், மாவட்ட இளை ஞர் நலன் மற்றும் விளை யாட்டு அலுவலர் லெனின், நகர கழக செயலாளர் இரா.முருகேசன், பொதுக் குழு உறுப்பினர் இரா. பாலு,மாவட்ட பொறியா ளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், நகர் மன்ற துணைத்தலைவர் கலியமூர்த்தி, மாவட்ட இலக்கிய அணி அமைப்பா ளர் கருப்புசாமி, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் க.அருண்ராஜா அரசு அலுவலர்கள், நகர்மன்ற உறுப்பினர்கள், பொதுமக் கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

அரசுத் துறைகளில்

67,000 காலிப் பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும்!

வேடசந்தூரில் அமைச்சர் அர.சக்கரபாணி பேச்சு!

திண்டுக்கல்.நவ.7- அரசு துறைகளில் 67,000 காலிப்பணியிடங்கள் விரை வில் நிரப்பப்படும் என வேட சந்தூரில் கலைஞர் நூற் றாண்டு விழா, மாபெரும் தனியார்துறை சிறப்பு வேலைவாய்ப்பு முகாமில் பணி நியமன ஆணைகளை வழங்கி பேசுகையில் அமைச் சர் அர.சக்கரபாணி குறிப்பிட்டார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் மொ.நா.பூங்கொடி தலைமை யில் மாபெரும் தனியார் துறை சிறப்பு வேலைவாய்ப்பு முகாம் வேடச்சந்தூரில் நடைபெற்றது.பணிவாய்ப்பு பெற்றவர்களுக்கு பணி நிய மன ஆணைகளை உணவுத் துறை அமைச்சர் அர. சக்கர பாணி வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி பேசியதா வது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், எல்லோருக்கும் எல்லாம் என்ற வகையில் ஒவ்வொரு குடும்பத்தி ற்கும் அரசின் நலத்திட்ட உதவி சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்தில் திட்டங் களை அறிவித்து செயல்ப டுத்தி வருகிறார். தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதி களை நிறைவேற்றிய தோடு, சொல்லாத பல திட்டங்களை அறிவித்து, செயல்படுத்தி வரு கிறார்.

பல்வேறு சிறப்பான திட்டங்கள்!

மகளிர் நலனுக்காகவும், மேம்பாட்டுக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப் படுகின்றன. மகளிருக்கு நகர பேருந்தில் கட்டணமில்லா பயண சேவை வழங்கப்பட்டு வருகிறது. அரசு பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை படித்து உயர் கல்வி படிக்கும் மாணவி களுக்கு மாதம் ரூ.1,000 உத வித்தொகை வழங்கும் புதுமைப்பெண் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தற்போது கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தை கொண்டு வந்துள்ளார். தகுதி யான இல்லத்தரசிகளுக்கு மாதம் ரூ.1,000 வழங்கும் திட்டம் கடந்த செப்டம்பர் 15ஆம் தேதி தமிழ்நாடு முதல மைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் சுமார் 1.06 கோடி குடும்பத் தலை விகள் பயனடைந்துள்ளனர். மேலும், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை கிடைக்கப் பெறாதவர்கள் இ-சேவை மையத்தில் ஆதார் அட்டை, குடும்ப அட்டை, வங்கி புத்த கம், வீட்டு வரி ரசீது ஆகிய வைகளுடன் பதிவு செய் தால், அந்த மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு, தகுதியிருந்தால் அவர்களுக் கும் கலைஞர் மகளிர் உரி மைத் தொகை கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப் படும்.

அரசுப் பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிக ளுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் திட்டம் தொடங் கப்பட்டுள்ளது. இதன்மூலம் 31,000 பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 17.50 இலட்சம் குழந் தை கள் பயன்பெறுகின்ற னர். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இதுபோல் பல் வேறு சிறப்பான திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்.

வேலைவாய்ப்பை உருவாக்க நடவடிக்கை!

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை ஏற்ப டுத்தவும், படித்த இளைஞர்க ளுக்கு வேலைவாய்ப்பை உரு வாக்கி அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத் தவும் பல்வேறு நடவடிக்கை களை மேற்கொண்டு வருகி றார். தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வா ணையம் மூலம் தேர்வு பெற்ற 10,225 மாணவ, மாணவிகளுக்கு பணி நிய மன ஆணைகளை கடந்த சில நாட்களுக்கு முன்னர் வழங்கி னார். மேலும், அரசு துறைக ளில் 67,000 காலிப்பணியி டங்கள் தேர்வாணையம் மூலம் நிரப்பப்படும் என அறி வித்துள்ளார்கள்.

தமிழக அரசு சார்பில் இளைஞர்களின் மேம்பாட் டுக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. தமிழ்நாடு மாநில ஊரக மற் றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் சார்பில் பல்வேறு தொழில் திறன் பயிற்சிகள் அளிக்கப்பட்டு அவர்கள் சுய தொழில் தொடங்கிடவும், தொழில் திறன் பயிற்சிகள் மூலம் வேலைவாய்ப்புகள் பெறவும் வழிவகை ஏற்படுத் தப்பட்டு வருகிறது. மகளிர் சுயஉதவிக் குழுவின ருக்கு தொழில் பயிற்சி அளித்து, அவர்கள் தொழில் தொடங் கிட வங்கி கடனுதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

மாணவ, மாணவிகள் படிக்கின்ற காலத்திலேயே தொழிற்பயிற்சி அளிக்கும் "நான்முதல்வன் திட்டம்" செயல்படுத்தப்படுகிறது. இதன்மூலம் 10 இலட்சம் இளைஞர்கள் பயனடைந் துள்ளனர்.

போட்டித் தேர்வுகளுக்காக பயிற்சி வகுப்புகள்!

மாணவ, மாணவிகள், இளைஞர்கள் அரசு மற்றும் தனியார் துறைகளில் வேலை வாய்ப்பு பெற்று உயரிய நிலையை அடைகின்ற நோக் கில் தொழிலாளர் நலன் மற் றும் திறன் மேம்பாட்டுத் துறை, வேலைவாய்ப்பு மற் றும் பயிற்சித் துறையின் சார் பில் மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையங் கள் மூலம் போட்டித் தேர் வுக்கான பயிற்சிகள் மற்றும் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. படித்த இளைஞர்கள் தங்கள் கவனத்தை சிதறவிடாமல், தமிழக அரசு சார்பில் செயல் படுத்தப்படும் இதுபோன்ற பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டு பயிற்சி பெற்று, போட்டித் தேர்வுகளில் வெற்றி பெற்று, பணி வாய்ப் புகளை பெற்று தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த் திக்கொள்ள வேண்டும்.

சிறப்பு வேலைவாய்ப்பு முகாம்கள்!

வேலைவாய்ப்புத் துறை யால் தனியார்துறை வேலை வாய்ப்பை ஊக்குவிக்கும் பொருட்டு, படித்த வேலை வாய்ப்பற்ற பதிவுதாரர் களை தனியார் துறையில் பணியமர்த்தம் செய்யும் பொருட்டு, தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் திண்டுக்கல் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் மாதந்தோறும் நடத்தப்பட்டு வருகின்றன.

மேலும், தனியார் துறை யில் படித்த வேலைவாய்ப் பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக் கும் வகையில் முன்னணி நிறு வனங்களை பங்கேற்க செய்து, மாபெரும் சிறப்பு வேலைவாய்ப்பு முகாம்களும் நடத்தப்படுகின்றன.

திண்டுக்கல் மாவட்டத் தில் மாணவ, மாணவிகளின் உயர்கல்வி தரத்தை மேம்ப டுத்துவதற்காக புதிய கல்லூரி கள் தொடங்கப்பட்டுள்ளன. ஆத்தூர் சட்டமன்றத் தொகு தியில் 2 கல்லூரிகள், ஒட்டன் சத்திரம் சட்டமன்றத் தொகு தியில் 2 கல்லூரிகள் மற்றும் விருப்பாட்சியர் தொழிற்ப யிற்சி நிலையம் ஆகியவை தொடங்கப்பட்டுள்ளன. மேலும் பழனியில் சித்தா மருத்துவக்கல்லூரி, கொடைக்கானலில் கூட்டுறவு மேலாண்மை பயிற்சி இணையம் ஆகியவை அமைக்கப்படவுள்ளன.

திண்டுக்கல் மாவட்டத் தில் திண்டுக்கல், ஒட்டன்சத் திரம், ஆத்தூர் பகுதிகளில் ஏற்கனவே தனியார் துறை சிறப்பு வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டுள் ளன. அந்த வகையில் இன் றைய தினம் வேடசந்தூரில் மாபெரும் தனியார் துறை சிறப்பு வேலைவாய்ப்பு. இம் முகாமில் 150க்கும் மேற் பட்ட முன்னணி தனியார் துறை நிறுவனங்களில் ஏராள மானோர் பெற்றுள்ளனர். எட்டாம் வகுப்பு முதல் ஐ.டி.ஐ., டிப்ளமோ, பட்டப் படிப்பு, பட்டயப்படிப்பு, பொறியியல் படித்த இளை ஞர்கள் கல்வித் தகுதிக்கேற்ப பல்வேறு நிறுவனங்களில் வேலைவாய்ப்பினை பெற் றுள்ளனர்.

எல்லோருக்கும் எல்லாம்!

எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்ற உன்னத நோக்கத்துடன், பொதுமக்களின் எண்ணங் கள், எதிர்பார்ப்புகளை நிறை வேற்றும் வகையில் தமிழ் நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களுக்கான பல் வேறு திட்டங்களை அறி வித்து, அவற்றை செயல்ப டுத்தி வருகிறார். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு அனைவரும் தொடர்ந்து ஆத ரவு வழங்க வேண்டும், என உணவு மற்றும் உணவுப்பொ ருள் வழங்கல் துறை அமைச் சர் அர.சக்கரபாணி பேசி னார்.

இந்நிகழ்ச்சியில், வேடசந் தூர் சட்டமன்ற உறுப்பினர் ச.காந்திராஜன், தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப் புற வாழ்வாதார இயக்கம் மகளிர் திட்ட இயக்குநர் . நா.சரவணன், வேடசந்தூர் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் சௌடீஸ்வரி கோவிந்தன், வேடசந்தூர் பேரூராட்சி தலைவர் கா. மேகலா கார்த்திகேயன், பழனி வருவாய் கோட்டாட் சியர் சௌ.சரவணன், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழி காட்டும் மையம் உதவி இயக் குநர் ச.பிரபாவதி, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் திருமதி சு.காமேஸ்வரி, மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் தமிழ்ச்செல்வி ராமச்சந்திரன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

சேலம் கிழக்கு மாவட்ட மாணவரணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாநில அளவிலான பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டி வாழப்பாடியில் உள்ள கிழக்கு மாவட்ட அலுவலகம் தளபதி மு .க. ஸ்டாலின் அறிவாலயம் அரங்கில் நடைபெற்றது. போட்டிக்கு சிறப்பு அழைப்பாளராக கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் போட்டியை துவக்கி வைத்தார். போட்டிக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் முனைவர் அ.சீனிவாசன் வரவேற்புரை ஆற்றினார், நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் கருணாநிதி, மாவட்ட துணைச் செயலாளர்கள் சுரேஷ்குமார், சின்னதுரை, மாநில மாணவரணி துணை செயலாளர் தமிழரசன், ஆதிதிராவிடர் நலக்குழு மாநில துணை செயலாளர், ஏற்காடு தொகுதி பார்வையாளர் புஸ்பராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சங்கர் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டை முன்னிட்டு - திருப்பூரில்

பேச்சுப் போட்டி - கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ - மாணவிகளுக்கு பரிசுகள்!

மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ., வழங்கினார் !

திருப்பூர், நவ. 7- முத்தமிழறிஞர் கலைஞ ரின் நூற்றாண்டை முன் னிட்டு திருப்பூர் வடக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் மாவட்ட மாண வர் அணி அமைப்பாளர் து.கோபிநாத் ஏற்பாட்டில் பி.எஸ்.ஜி. கலைக்கல்லூரி முன்னாள் சேர்மன் செ. திலகராஜ் தலைமையில் நடைபெற்ற மாநில அளவி லான பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான பேச்சு மற்றும் கட்டுரைப் போட் டிகளை திருப்பூர் வடக்கு மாவட்டச் செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப் பினர் க.செல்வராஜ் எம். எல்.ஏ., துவக்கி வைத்து வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கினார்.

முத்தமிழறிஞர் கலைஞ ரின் நூற்றாண்டை முன் னிட்டு திருப்பூர் வடக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் 03.11.2023 வெள் ளிக்கிழமை அன்று திருப் பூர், சங்கீதா திரையரங்கம் எதிரில் அமைந்துள்ள பனி ரெண்டார் திருமண மண் டபத்தில் மாநில அளவி லான பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான பேச்சு மற்றும் கட்டுரை போட்டி மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் து.கோபி நாத் ஏற்பாட்டில் பி.எஸ். ஜி. கலைக்கல்லூரி முன் னாள் சேர்மன் செ.திலக ராஜ் தலைமையில் மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் ரேவதி அருள்பிகாஷ் மாணவர் அணி விஜய சிம் மராஜா ம.பிரேம்கவின் வரவேற்புரையில் மாவட்ட மாணவரணி அணி துணை அமைப்பா ளர்கள் மு.கார்த்திகேயன் க.அசோக்குமார் ரா.டேவிட் இளவரசன் ஆர்.என்.டி.விவேக், மாந கர மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் சபரி நட ராஜன், எஸ்சபரீஸ், அ.சூரி யபிரகாஷ், வீ.சதீஸ்குமார், ஐ.மணிகண்டன், வெ.குணா, தெற்கு மாநகர பொருளாளர், மாமன்ற உறுப்பினர் செந்தூர் முத்து, பகுதி கழக செயலா ளர் மு.க.உசேன், வட்டக் கழக செயலாளர் பி.தங்க ராஜ் ஆகியோர் முன்னி லையில் நடைபெற்ற போட்டிகளை திருப்பூர் வடக்கு மாவட்டச் செய லாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ., துவக்கி வைத் தார். இப்போட்டிகளில் கல்லூரி மாணவர்களுக் கான கட்டுரைப் போட்டி யில் 40 மாணவ, மாணவி யர், பேச்சுப்போட்டியில் 25 மாணவ, மாணவியர் என மொத்தம் 65 பேரும், பள்ளி மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டியில் 200 பேரும், பேச்சுப் போட்டியில் 113 பேரும் என மொத்தம் 313 கலந்து கொண்டனர்.

இதில் வெற்றிபெற்ற மாணவ, மாணவிகளுக்கு முதல் பரிசாக நான்கு நபர் களுக்கு தலா ரூபாய் 10 ஆயிரமும், இரண்டாம் பரி சாக நான்கு நபர்களுக்கு தலா ரூபாய் 7 ஆயிரமும், மூன்றாம் பரிசாக நான்கு நபர்களுக்கு தலா ரூபாய் 5 ஆயிரம் நான்கு நபர்க ளுக்கு என மொத்தம் 12 மாணவ, மாணவிகளுக்கு ரூபாய் 88 ஆயிரத்தை திருப்பூர் வடக்கு மாவட் டச் செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ. வழங்கினார்.

இதில் மாநில மாணவர் அணி இணைச் செயலாளர் எஸ்.மோகன், மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் கா.பொன்ராஜ் ஆகியோர் சிறப்பு விருந்தி னர்களாக கலந்து கொண் டனர். இந்நிகழ்ச்சியில் டி.கே.டி.மு.நாகராசன், ந.தினேஷ்குமார், க.நடராஜன், மேங்கோ அ.பழனிசாமி, வெ.ஜோதி, போலார் ஆர்.சம்பத்கு மார், க.ஈஸ்வரமூர்த்தி, பி.ஆர்.செந்தில்குமார், வெ.ராதாகிருஷ்ணன், வெ.உமா மகேஸ்வரி, செ.உமாமகேஸ்வரி, எம். எஸ்.மணி, ப.கலைச் செல்வி, மு.சிவபாலன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

மு.சக்தி வேல், வீ.கௌ தம் சிவகுமார் ஆகியோர் நன்றியுரையாற்றினர்.

கோவை வடக்கு மாவட்டம் சர்க்கார்சாமகுளம் ஒன்றியம்,கோவில்பாளையத்தில் 'நீட்டை ஒழிப்போம் மாணவர்களை காப்போம்' என்கிற 50 நாட்கள் 50 லட்சம் கையெழுத்து இயக்கத்தின் துவக்க விழா சர்க்கார் சாமகுளம் ஒன்றிய செயலாளர் எஸ்.பி.சுரேஷ்குமார் தலைமையில்,பேரூர் கழக செயலாளர் பி.சுரேந்திரன் வரவேற்பில், டி.பி.சுப்பிரமணியம், வி.ஆர்.ராஜன், மணி(எ)அ.விஜயகுமார் முன்னிலையில் கோவை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தொ.அ.ரவி துவங்கி வைத்து சிறப்புரையாற்றினார். இந் நிகழ்ச்சியில் அசோக் ஆறுக்குட்டி, கோமளவள்ளி கந்தசாமி, நந்து, எஸ். பர்வீனா, க.வைரமுத்து, இடிகரை.ஜனார்த்தனன், கீரணத்தம்.ராசு(எ)பழனிச்சாமி, ஜான்ஆரோக்கியசாமி, ஜீவா, ஜெயக்குமார், பிரபு,யோகேஷ், செந்தில், சக்திவேல் மற்றும் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

அ.பொ. அரசு
நவம்பர் 7 (1987)

தி.மு.க. சென்னை மாநகராட்சி மன்றத்தை கைப்பற்றியபோது தி.மு.க.வின் முதல் மேயராக பொறுப்பேற்று பணியாற்றியவர்.

20 ஆண்டுகாலம் மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும் – 1967ஆம் ஆண்டு மாதவரம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றினார்.

1958ஆம் ஆண்டு நடைபெற்ற கருப்புக் கொடி போராட்டத்திலும், 1962ஆம் ஆண்டு விலைவாசி உயர்வை எதிர்த்து நடைபெற்ற போராட்டத்திலும் கலந்து கொண்டு சிறை சென்றார்.

பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோருடன் நெருங்கிப் பழகியவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.